



பல வண்ண உடைகளில் நிகழ்ச்சிக்கு இடையில் விதவிதமான நடனங்களால் மேடையை அதிரவைத்தனர் பல்கலைக்கழக நடனக் குழுவினர். **படங்கள்: திமத்தி டேவிட்**

**இடது படம்:** நிகழ்ச்சி முழுவதிலும் பல்வேறு நகைசசுவைப் பாத்திரங்களை ஏற்று சிரிப்பலைகளால் அரங்கை நிறைத்த ராஜா அரவிந்த் ராஜ், சயத் அஷரத்துல்லா, சரவணன் சண்முகம்.



நாடகப் படைப்பில் சித்திரிக்கப்பட்ட நவநாகரிக உடையணிந்த மன்னராகவும் மாண்ட பின்பு தலையில் தீ, வண்ணம் தீட்டிய முகம் இவற்றோடு கனவில் தோன்றியும் அசத்தலாக நடித்துப் பார்வையாளர்களிடையே தாக்கத்தை உருவாக்கினார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் பாலகிருஷ்ணன் கிருஷ்ணசாமி.

# புதுமைகளுடன் ‘சங்கே முழங்கு’

விஜயகுமார் அருள் ஒஸ்வின்,
மா பிரெமிக்கா

ஒளிமயமான எதிர்காலத்துடன் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லவும் உலக அளவில் நமது நிலையைத் தக்கவைத்துக் கொள்ளவும் மாறிவரும் சூழலுக்கேற்ப ஒரு சமூகமாக நாம் எப்படி நமது லட்சியங்களையும் செயல்பாடுகளையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை இவ்வாண்டின் ‘சங்கே முழங்கு’ பார்வையாளர்களிடம் வலியுறுத்த விழைந்தது.

முடியாட்சி புரியும் நவநாகரிக மன்னர், இளவரசர் ஆகியோருக்கும் நாடகக்குழு நடத்தும் அண்ணன், தங்கை ஆகியோருக்கும் இடையே மறைமுகமாக மோதல் ஏற்படுகிறது. சவால் விடுக்கும் தங்கைக்கு ஆதரவாகப் புரட்சி நாடகம் ஒன்றை எழுதி அரங்கேற்றும் அண்ணன், அரசின் பிடியில் மாட்டிக்கொள்கிறான்.

கதையில் இடம்பெறும் சாம்ராஜியத்தின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது? மன்னரின் இறப்பிற்குப் பிறகு, இளவரசர் அரசாளும் புது உத்திகளைக் கடைப்பிடிப்பாரா? என்பது போன்ற கேள்விகளை சிறையிலிருந்து திரும்பும் அண்ணன் நடத்தும் நாடகங்கள் வழியாக எழுப்பிப் பார்வையாளர்களின் சிந்தனையைத் தூண்டியது சங்கே முழங்கு 2015.

சிரிக்க, சிந்திக்க வைத்த இப்படைப்பில் தமிழ் அழகாகக் கையாளப்பட்டிருப்பதை எண்ணி மகிழ்வதாகக் கூறினார் காயத்ரி செளந்தராஜன், 20.

“உலக அரங்கில் தழைத்தோங்கும் சிங்கப்பூர் எதிர்காலத்தில் இன்னும் சிறந்து விளங்க வேண்டுமென்றால் அரசியலில் மக்கள் அதிக ஈடுபாடுகாட்டி, மக்களுக்கும் அரசுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கும் நடுநிலையான தளத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை இவ்வாண்டின் ‘சங்கே முழங்கு’ வெளிப்படுத்தியது,” என்றார் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் தலைவரும் இந்நிகழ்ச்சியின் தயாரிப்பாளருமான ம.கணேஷ்குமார், 23.

நாடகத்தின் ஓர் அங்கமாக இந்தியாவின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளில் ஒன்றான ‘களரிபயட்’ சண்டைக் காட்சியும் இடம்பெற்று

> “ சிங்கப்பூர் எதிர்காலத்தில் இன்னும் சிறந்து விளங்க வேண்டுமென்றால் அரசியலில் மக்கள் அதிக ஈடுபாடு காட்டி, மக்களுக்கும் அரசுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கும் நடுநிலையான தளத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை இவ்வாண்டின் ‘சங்கே முழங்கு’ வெளிப்படுத்தியது.
>
> **‘சங்கே முழங்கு’ நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ம கணேஷ்குமார்**

பார்வையாளர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

“மனதையும் உடலையும் ஒரு நிலைப்படுத்த உதவிய களரி கலை என் கதாபாத்திரத்திற்குத் தனித்தன்மை சேர்த்ததது,” என்று நாடகத்தில் நடித்த ஜெ.சசிகுமார், 23, குறிப்பிட்டார்.

தமிழ்ச் சமூகத்தினர் மட்டுமல்லாமல் பிற இனத்தவர்களும் இந்த நாடகத்தின் சுவையை ருசிக்க வழிவகுக்கும் நோக்கில் முதல்முறையாக ஆங்கில மொழிபெயர்ப்புகளும் இடம் பெற்றன.

“நடிகர்கள் பேசுவது எனக்குப் புரியாவிட்டாலும் ஆங்கில மொழிபெயர்ப்புகளுடன், பிரமிப்பான மேடை அலங்காரமும் நடிகர்களின் நடிப்பாற்றலும் என்னை கதைக்குள் இழுத்துச் சென்றன”, என்று முதன்முறையாக ஒரு தமிழ் நாடகத்தைக் கண்ட ராண்டி சொ, 20, கூறினார்.

மேலும், ‘அகாஷிக் இயக்கம்’ எனும் இசைக்குழு நடிகர்களோடு ஒன்றிணைந்து செயல்பட்டுப் பார்வையாளர்களின் அனுபவத்தை மெருகேற்றியது.

ஷபிர் இசைப் பள்ளியுடனும் மேல்நிலை மாணவர்களுடனும் இணைந்து ‘முழங்கு’ என்ற இசைக் காணொளி வெளியிடப்பட்டது. சமூகத்தில் மாற்றங்களுக்கு வழிவகுக்கும் இளையர்களின் மனவலுவையும் பலத்தையும் சுட்டிக் காட்டும் விதம் இந்த இசைவட்டு அமைந்துள்ளது.

19வது முறையாகச் ‘சங்கே முழங்கு’ வெற்றிகரமாக மேடையேறியுள்ளதற்கான காரணமாக அமைந்தது விளம்பரம், நிதித் திரட்டு, நலப்பராமரிப்பு, மேடை அலங்காரம், தளவாடங்கள், ஆடை அலங்காரம் போன்ற பிரிவுகள் தவிர நடிகர்கள், நடன மற்றும் இசைக் கலைஞர்கள் என்று சுமார் 150 இளையர்களின் ஒருமித்த முயற்சி.

முன்னாள் மாணவர்கள் பலர் தங்கள் முழு நேர வேலை, கடமைகளுக்கிடையே ‘சங்கே முழங்கு’ நிகழ்ச்சிக்கான நடன அமைப்பாளர்களாக இருந்து பல மாணவர்களுடன் நடனப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

“2003ஆம் ஆண்டில் தொடங்கிய என் ‘சங்கே முழங்கு’ பயணம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. எனது நடனத் திறமையை வளர்க்க உதவிய இந்த மேடை நாடகத்திற்கு என்னால் முடிந்தவரை பங்களிப்பேன். பார்வையாளர்களின் வித்தியாசமான விருப்பங்களுக்கேற்ப வெவ்வேறு நடன வகைகளை அமைப்பது சவாலாக இருந்தது,” என்று நடனங்களை அமைத்த முன்னாள் மாணவி அனுராதா, 32, கூறினார்.

பிரம்மிக்கவைக்கும் மேடை அலங்காரப் பொருட்களைத் தயாரிக்கும் பணிகளிலும் முன்னாள் மாணவர்களின் வழிகாட்டுதல் இருந்தது.

‘கோலோசியம்’ என்று அழைக்கப்படும் ரோமானிய சண்டைக் களத்தைபோல் உருவாக்கப்பட்ட மேடைத்தளம் பார்வையாளர்களை வியக்க வைத்தது.



**இடது படம்:** மன்னரின் இறப்புக் காட்சி புத்தாக்கச் சிந்தனையுடன் காண்பிக்கப்பட்டது. மேடையை விட்டு சுமார் 5 மீட்டர் உயரத்துக்கு மன்னரின் உடல் காற்றில் மேலெழும்பிப் பறப்பதுபோல் கயிறு கொண்டு படைக்கப்பட்ட சாகசத்தைப் பார்த்து அரங்கில் கரவொலி நிறைந்தது.

## ‘எழுச்சியில் பிறந்த இளந்தீ, அச்சுடைத்து எழு நீ’

சங்கே முழங்கு 2015 சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகக் கலாசார அரங்கத்தில் இரண்டு நாட்களாக ஆகஸ்ட் 14, 15 தேதிகளில் 3,000 பேர் முன்னிலையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. 1987–இல் தொடங்கிய சங்கே முழங்கின் பயணம், தற்போதைய சிங்கப்பூர் சூழலுக்குத் தகுந்தாற்போல் மேல்நிலை மாணவர்களுக்கிடையே தமிழ் மொழியின் பயன்பாட்டையும் புழக்கத்தையும் அதிகரிக்கும் தளமாக உருவெடுத்துள்ளது. சிங்கப்பூரின் பொன் விழாவை முன்னிட்டு இவ்வாண்டின் சங்கே முழங்கு ‘எழுச்சியில் பிறந்த இளந்தீ, அச்சுடைத்து எழு நீ’ எனும் கருப்பொருளைக் கொண்டிருந்தது. விரைவில் இதன் காணொளி ‘யூடியூபில்’ வெளியாகவுள்ளது.



‘கோலோசியம்’ போன்று வடிவமைக்கப்பட்ட மேடை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.